**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், மாசி மாதம் 13 ம் நாள்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் புதன்கிழமை

**<u>இடைமனு எண். 4/2026</u>**

**in**

**<u>இடைமனு எண். 3/2025</u>**

**in**

**<u>நிறைவேற்று மனு எண். 3/2021</u>**

பிரபாகரன் ... **மனுதாரர்/ 5 ம் எதிர்மனுதாரர்/ 5 வது கட்சி சேர்க்கவேண்டியவர்**

**// எதிர்//**

சோமசுந்தரம் ... **எதிர்மனுதாரர்/மனுதாரர்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.SR.ராஜேஷ்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சபரிநாதன், அவர்கள் ஆஜராகியும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 106ன் கீழ் 24.10.2025 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1). மனுவின் சுருக்கம்:-</u>**

1.1). மனுதாரர் E.A.No.3/2025-ல் 5 ம் எதிர்மனுதாரர் ஆவார். 24.10.2025

அன்று எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர் ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டுள்ளார். எதிருரை தாக்கல் செய்யாதது வேண்டுமென்றோ அல்லது அலட்சியமாகவோ இல்லை. மனுதாரரின் உடல்நலக்குறைவு காரணமாக எதிருரை தாக்கல் செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்க மனுதாரரின் வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. மனுதாரரின் வழக்கறிஞரைத் தொடர்பு கொண்டபோது, மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டதை அறிந்து கொண்டார். எனவே, மனுதாரர் எதிருரையுடன் இந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளார். எனவே 24.10.2025 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்வது அவசியமானது ஆகும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

**<u>2). எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

2.1). மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானவை மற்றும் உண்மைக்கு புறம்பானவையாகும். மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் சிலவற்றை தவிர மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது வேண்டுமென்றே நீதிமன்ற நேரத்தை வீணடிக்க வேண்டியும், வழக்கை நடத்தாமல் இழுத்தடிப்பதற்காகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் மனுதாரருக்கு எந்த வித முகாந்திரமும் கிடையாது. வழக்கை திசை திருப்ப வேண்டி பொய்யான சங்கதிகளுடன் மனுதாரர் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2.2). மனுதாரருக்கு உடல் நிலை சரியில்லை என்றும், அதனால் நீதிமன்றத்திற்கு ஆஜராக முடியாது என்ற சங்கதிகளை முற்றிலும் எதிர்மனுதாரர் மறுக்கிறார். மேலும் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அதன் அடிப்படையிலேயே மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மேற்படி வழக்கை இழுக்கும் பொருட்டு வேண்டுமென்றே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும் மேற்படி மனுதாரர் தன்னால் நீதிமன்றத்திற்கு வரமுடியாது என்று கூறுவது பொருட்டு எந்த

ஒரு சாட்சியையும் இந்நீதிமன்றத்தில் முன்னெடுக்கவில்லை. பொய் காரணங்களை கூறி மனுதாரர் இந்த மனு தாக்கல் செய்திருப்பது நேரத்தை வீணடிக்கும் செயலாகும். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. நிறைவேற்று மனு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில், 24.10.2025 அன்று எதிருரை தாக்கல் செய்யாததால் மனுதாரர் ஒருதலைப்பட்சம் ஆக்கப்பட்டுள்ளார். மனுதாரரின் உடல்நலக்குறைவு காரணமாக எதிருரை தாக்கல் செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்க மனுதாரரின் வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என சொல்லப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

5.1). அசல் வழக்கு எண்.132/2004 ல் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு கீழ்படியாமல், மதிக்காமல், அவமதிப்பு செய்ததற்காக நிறைவேற்று மனு எண்.3/2021 ல் 2 ம் எதிர்மனுதாரரை சிவில் சிறையில் அடைக்க வேண்டும் என நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு, 2 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட படியால் அவரது வாரிசுகளை 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்க்க வேண்டி E.A.No.3/2025 தாக்கல் செய்யப்பட்டு, அதில் 5 ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாமல் 24.10.2025 அன்று ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்.

5.2). இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்கையில் 5ம் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதன் காரணமாக எதிருரை தாக்கல் செய்ய முடியவில்லை என சொல்லியுள்ளார். நிறைவேற்று மனுவில் இறுதி நிலையை எட்டவும், மேற்படி வழக்குகள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, நீதியின் நலன் கருதி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.
**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**சூலூர்.**

Draft/ Fair Order
E.A.No.4/2026 in
E.A.No.3/2025 in
E.P.No.3/2021
Dated: 25.02.2026
DMC, Sulur